**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2011 ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான மாநில அரசு விருதுகள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந. 2.1)த் துறை

**அரசாணை(ப) எண்.10** **நாள்: 08–12–2011**

கார்த்திகை 22, திருவள்ளுவர் ஆண்டு 2042

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை(நிலை) எண். 58, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04–11–2011.

<u>மீண்டும் படிக்கப்பட்டவை:</u>

2. மாற்றுத் திறனாளிளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண். 6684/இவாததி–1/2011, நாள் 25.11.2011 மற்றும் 05–12–2011.

------

**<u>ஆணை:</u>**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் அன்று நடைபெறும் ‘அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தின விழா’வின்போது சிறந்த மாற்றுத் திறனாளிகளுக்கும், அவர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கும் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று சிறந்த மாற்றுத் திறனாளி பணியாளர்கள், சிறப்பாக சேவை புரிந்த நிறுவனம், சமூகப் பணியாளர், அதிக அளவில் மாற்றுத் திறனாளிகளைப் பணியமர்த்திய தொழில் நிறுவனம், சிறந்த ஆசிரியர் மற்றும் மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள் மாநில விருதுகளுக்கு கீழ்க்காணும் நபர்களை / நிறுவனங்களை அரசு தெரிவு செய்து விருதுகளை வழங்கி அவர்களை சிறப்பிக்க ஆணையிடுகிறது.

| வ.எண். | விருதின் விவரம் | தேர்வு செய்யப்பட்டவர்கள் பெயர்/நிறுவனம் விவரம் |
|---|---|---|
| 1. | சிறந்த பணியாளர் (பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோர்) | திரு. ந. கி. சொக்கலிங்கம், 17/51, சூடியம்மன் பேட்டைத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை–15. |

| | | |
|---|---|---|
| 2. | சிறந்த பணியாளர்<br>(செவித்திறன்<br>பாதிக்கப்பட்டோர்) | திரு. ஆர். அருண்,<br>அனன்யா பிளாட்ஸ்,<br>எண்.6, திருவீதி அம்மன்<br>கோயில் தெரு,<br>இராமகிருஷ்ணா நகர்,<br>சென்னை–28. |
| 3. | சிறந்த பணியாளர்<br>(கை, கால் பாதிக்கப்பட்டோர்) | திரு. த. மனோகரன்,<br>ரம்யா கிளினிக்,<br>எண்.31, மதுரை ரோடு,<br>மணப்பாறை,<br>திருச்சி மாவட்டம். |
| 4. | சிறந்த பணியாளர்<br>(மனவளர்ச்சி குன்றியோர்) | திரு. கே. தினகரன்,<br>த/பெ. குழந்தைவேலு,<br>7/4 ஏ, பி.பி. அம்மன் கோயில்,<br>3–வது தெரு,<br>மூலக்கொத்தளம்,<br>சென்னை–21. |
| 5. | சிறந்த பணியாளர்<br>(தொழுநோய் குணமடைந்தோர்) | திரு. ஏ. பிரகாசம்,<br>எண்.33, 2–வது தெரு,<br>பலராமபுரம்,<br>சென்னை–49. |
| 6. | சிறந்த நிறுவனம் | சாக்சீடு,<br>395, பழைய குட்ஷெட் ரோடு,<br>தெப்பக்குளம்,<br>திருச்சி–620 002. |
| 7. | சிறந்த சமூகப் பணியாளர் | திரு. பி. நாராயணன்,<br>எண்.8 ஏ, பாலசுப்பிரமணியன் தெரு,<br>நாதெள்ள சம்பத்து ரோடு,<br>அம்பத்தூர்,சென்னை–53. |
| 8. | சிறந்த ஆசிரியர்<br>(பார்வைத்திறன்<br>பாதிக்கப்பட்டோருக்குக்<br>கற்பித்தல்) | திருமதி வீ. ஜெயராணி,<br>செயின்ட் ஜோசப் பார்வையற்றோர்<br>சிறப்பு பள்ளி, ஜஸ்டீன் நகர்,<br>பரவை அஞ்சல்,<br>மதுரை–625 402. |

| | | |
|---|---|---|
| 9. | சிறந்த ஆசிரியர் (செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்குக் கற்பித்தல்) | திருமதி ஏ. விமலா கிருஸ்டினா, தி கிளார்க் செவித்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி, மைலாப்பூர், சென்னை–4. |
| 10. | சிறந்த ஆசிரியர் (மனவளர்ச்சி குன்றியோருக்குக் கற்பித்தல்) | திரு. ஜே. ஜெயசீலன், தலைமையாசிரியர், ஐ.இ.எல்.சி. மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி, பேரணாம்பட்டு, வேலூர் மாவட்டம். |
| 11. | சிறந்த தொண்டு நிறுவனம் (அனைவருக்கும் கல்வி) | ஸ்ரீ அவிநாசிலிங்கம் அறக்கட்டளை நிறுவனம், கோயம்புத்தூர். |

3. மேற்காணும் விருது பெறும் நபர்களுக்கும் சிறந்த நிறுவனங்களுக்கும் 10 கிராம் எடையுள்ள 22 கேரட் தங்கப்பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது. மேலும் 2012 ஆம் ஆண்டு முதல் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி போதனை செய்தமைக்கான சிறந்த ஆசிரியர் விருது மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த கற்பித்தல் விருது ஆகிய இருவிருதுகளை நீக்கவும், 2012 ஆண்டு முதல் போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் சிறந்த ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு விருது வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பந்தப்பட்ட நபர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.

<u>நகல்:</u>
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
சமூக நலத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.